# රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව

# அரசகரும மொழிகள் திணைக்களம்

## III වන මට්ටම - දෙමළ

## மட்டம் III – தமிழ்

### ආදර්ශ ප්‍රශ්න

### மாதிரி வினாக்கள்

---

விசேட குறிப்பு

III ஆம் மட்டம் தமிழ் மொழிக்கான பாடப்பரப்பிற்கும் பாடப்புத்தகத்திற்கும் அமைவாக தயாரிக்கப்பட்ட மாதிரி வினாக்கள் சிலவற்றை பரீட்சார்த்திகளின் வசதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

විශේෂ සටහන

III වන මටටම **දෙමළ භාෂාවට** අදාළ විෂය නිර්දේශය හා පෙළ පොත් ඇසුරින් සකසන ලද ආදර්ශ ප්‍රශ්න කිහිපයක් විභාග අපේක්ෂකයන් වන ඔබගේ පහසුව පිණිස ඉදිරිපත් කර ඇත.

**01. பின்வரும் சொற்களைச் சரியாக எழுதுக.**

1. சிள்லரைத் காசு - ------------------------------------------------
2. பிண்னேறம் - ------------------------------------------------
3. விளுன்துட்டுது - ------------------------------------------------

02. பின்வரும் சொற்களுள் சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. முழுப்பேர் , முளுப்பெர், முலுப்பேர்
2. பிண்நேரம், பின்னேரம், பின்நேறம்
3. அஸ்பத்தரி, ஆச்பத்தரி, ஆஸ்பத்திரி

03. குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்குப்படுத்தி சரியான சொல்லை எழுதுக.

1. கிவங் முவிறைடு - ...............................
2. லும்கஅலவ - ...............................

3. ர்ணைளயாஆ - ..........................

04. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

(பொருளாதார, விழா, அவசர)

1. .............................. அபிவிருத்தி
2. விளையாட்டு ...........................
3. ..................... சிகிச்சை

05. பின்வரும் சொற்களுக்கான பன்மைச் சொற்களை எழுதுக.

1. பல் -................
2. தங்கை - ................
3. வட்டம் - .................

06. பின்வரும் சொற்களுக்கான ஒருமைச் சொற்களை எழுதுக.

1. சங்கங்கள் - ..........................
2. நாடுகள் - ..........................
3. நாட்கள் - ..........................

07. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

1. தாதியர்கள் நோயாளிகளுக்கு உதவி ................................
(செய்தார் / செய்தார்கள்)
2. தம்பி பாடசாலைக்கு ..............................
(செல்வார் / செல்வார்கள்)
3. நாங்கள் பரீட்சைக்குத் ..........................
(தயாராகிறோம் / தயாராகிறேன்)

08. எழுத்தில் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கைகளை இலக்கங்களில் எழுதுக.

1. நூற்று முப்பத்து நான்கு - ........................................
2. ஐநூற்று எழுபத்து மூன்று - ........................................
3. அறுநூற்று நாற்பத்து ஒன்று - ...................................

09. எண்களில் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கைகளை எழுத்தில் எழுதுக.

1. 356 - .......................................................
2. 1285 - .......................................................
3. 910 - .......................................................

10. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான சிங்களச் சொற்களை எழுதுக.

1. கடிகாரம் - .............................
2. தபால் நிலையம் - .............................
3. கட்டிடம் - .............................

11. பின்வரும் சிங்களச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ் சொற்களை எழுதுக.

1. නිලධාරියා - ..........................................
2. ඉතිහාසය - .......................................
3. පන්තිය - .......................................

12. தரப்பட்டுள்ள பந்தியை அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைக் கொண்டு பூரணப்படுத்தல் வேண்டும்.

(நன்னடத்தைக், , ஏற்றுக், தற்றுணிவின், கொள்கை, சுற்றறிக்கை, நிரூபிக்க, அரசகரும மொழியாக, நியமனத்திற்கான, சிங்கள, ஐந்து)

இந் நியமனம் (1) ……………………….. கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் ஐந்து (05) வருடங்கள் கடந்து செல்ல முன், அரச (2)………………… களுக்கு அமைவாக இரண்டாம் அரசகரும மொழித் தேர்ச்சியை அடைந்துள்ளதாக தாங்கள் (3) ……………………….. வேண்டும். தாங்கள் இந் நியமனத்திற்கான தகைமைகளை (4) ………………….. மொழியில் பூர்த்தி செய்திருப்பின், தங்களது இரண்டாம் அரசகரும மொழியாக அமைவது தமிழ் மொழியாகும். அதே போன்று தாங்கள் இந் நியமனத்திற்கான தகைமைகளை தமிழ் மொழியில் பூர்த்தி செய்திருப்பின், தங்களது இரண்டாம் (5) …………………….. அமைவது சிங்கள மொழியாகும். மேலும் தாங்கள் இந் (6) …………………………….. தகைமைகளை ஆங்கில மொழியில் பூர்த்தி செய்திருப்பின், தங்களின் (7) ………………………… படி அரசகரும மொழியாக சிங்களம் அல்லது தமிழ் ஆகிய இரு மொழிகளில் ஒரு மொழியில் தேர்ச்சியை (8) …………………… காலத்தினுள் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதன் பின்னர் நியமனம் ஏற்றுக் கொள்ளப்பட்ட தினத்தில் இருந்து (9) ………………….. ஆண்டுகளை விஞ்சாதவாறு அடுத்த அரசகரும மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். 2014.01.21ஆந் திகதிய அரசாங்க நிர்வாக (10) ……………………….. 01/2014 ஏற்பாடுகள் இதற்கு ஏற்புடையனவாகும்.

## பகுதி II

### 'அ' உப பகுதி

13. பின்வரும் பந்தியை வாசித்து அதிலுள்ள விடயங்களைக் கொண்டு தரப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்க.

கண்டி கலைமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துகையில் இணைப்பாட விதான செயற்பாடுகளில் காணப்படும் குறைப்பாடுகளை இனங்காணும் நோக்கில் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து வினாக் கொத்தொன்றை தயாரித்து மாணவர்களுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளனர். அதன் பிரகாரம் தரம் 9ஏ வகுப்பைச் சேர்ந்த கார்த்திக் எனும் மாணவனின் விபரங்கள் ஒரு பந்தியாக இங்கு தரப்பட்டுள்ளது. அவ் விடயங்களைக் கொண்டு கார்த்திக் பூர்த்தி செய்யும் வகையில் படிவத்தை பூர்த்தி செய்க.

தேவராஜ் மற்றும் வசந்தி ஆகியோரின் இரண்டாவது மகனாகவும் குடும்பத்தின் கடைசி பிள்ளையாகவும் 2002 மார்ச் 15ஆம் திகதி கார்த்திக் பிறந்தார். தற்போது க.பொ.த. சாதாரண தரம் பயிலும் ஒரு அக்காவும் க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்துள்ள ஒரு அண்ணனும் கார்த்திக்கிற்கு இருக்கின்றனர். பட்டதாரிகளான கார்த்திக்கின் பெற்றோர் சமுதாயத்தில் கௌரவமாக வாழ்கின்றனர். தந்தை கனிஷ்ட வித்தியாலயம் ஒன்றின் அதிபராவதோடு, தாய் விஞ்ஞான பாட ஆசிரியையாக பாரதி வித்தியாலயத்தில் சேவையாற்றுகிறார். தாயின் உதவி தொடர்ச்சியாக கிடைப்பதனால் கார்த்திக்கிற்கு விருப்பமான பாடம் விஞ்ஞான பாடமாகும். இருப்பினும் அவர் சுகாதார பாடத்தின் மீது அவ்வளவு நாட்டமின்மையால் எல்லா தவணைகளிலும் அப் பாடத்திற்கு ஆகக் குறைந்தப் புள்ளிகளையே பெறுவார். நாளாந்தம் தந்தையின் மோட்டார் வண்டியில் பாடசாலைக்குச் செல்லும் கார்த்திக் வகுப்பிற்கு காலையிலேயே சமுகமளிக்கும் மாணவர்களுள் ஒருவராவார்.

கலைமகள் வித்தியாலயம் - கண்டி

இணைப்பாட விதானச் செயற்பாடுகளை மேம்படுத்தும் கருத்திட்டம்

மாணவர் விபரப் படிவம்

தரம் [ ] வகுப்பு [ ]

1) மாணவரின் பெயர் :-

2) பிறந்த திகதி :-

3) விருப்பமான பாடம் :-

4) கடந்த தவணையில் ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்ற பாடம் :-

5) தந்தையின் பெயர் :-

6) தாயின் பெயர் :-

7) 1. தந்தை அல்லது தாய் அல்லாத வேறு ஒரு பாதுகாவலர் இருப்பின் அவரது பெயர் :-

2. உறவு முறை :-

8) பாடசாலைக்கு சமுகமளிக்கும் முறை :- பஸ் [ ]

(உரிய கூட்டில் ✓ அடையாளமிடுக) பாடசாலை வேன் [ ]

சைக்கிள் [ ]

நடந்து [ ]

வேறு [ ]

9) தந்தையின் தொழில் :-

தாயின் தொழில் :-

பாதுகாவலரின் தொழில் :-

10) சகோதர, சகோதரிகள் குறித்த விபரம் :-

சகோதரர்களின் எண்ணிக்கை [ ]

சகோதரிகளின் எண்ணிக்கை [ ]

11) பாடசாலைக்குச் செல்லும் சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை :-

12) குடும்பத்தில் உயர்கல்வி பெற்றுள்ளோர் யாவர்?

13) அவ்வாறு பெற்ற கல்வி மட்டம் யாது?

தரம் 10 வரை ☐

க.பொ.த. சா/த சித்தி ☐

க.பொ.த. உ/த சித்தி ☐

பட்டதாரி ☐

அதற்கு மேல் ☐

## ‘ஆ’ உப பகுதி

14. பின்வரும் தகவல்களைக் கொண்டு அலுவலகத்தின் அறிவித்தல் பலகையில் ஒட்டுவதற்காக அறிவித்தல் ஒன்றை எழுதுக.

சமூக சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றும் நிர்வாக உத்தியோகத்தரான திரு. சண்முகம் 2016 டிசம்பர் மாதம் 29ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார். அதன் பொருட்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந் நினைவு வைபவம் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களையும் டிவ் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு நலன்புரிச் சங்கத்தின் விழா ஒழுங்கமைப்புக் குழு அழைப்பு விடுக்கின்றது.

## ‘இ’ உப பகுதி

15. பின்வரும் தலைப்புக்களுள் <u>ஒன்றைத்</u> தெரிவு செய்து உரையாடலொன்று எழுதுக. எழுதும் போது பேச்சுத் தமிழ் வழக்கைப் பயன்படுத்தலாம். ஒரு விடையில் இருவருக்கிடையிலான உரையாடற் பகுதிகள் ஐந்தேனும் இருத்தல் வேண்டும்.

1) பாடசாலை வரவு குறைவான மாணவர் ஒருவரின் தாய் அல்லது தந்தையுடன் பொறுப்பாசிரியர் மேற்கொள்ளும் உரையாடல்.

2) உங்களது தந்தைக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தந்தைக்கு அந் நிலைமை ஏற்பட்ட முறை குறித்து மருத்துவருக்கு தெளிவுப்படுத்தி தந்தையின் தற்போதைய நிலைமை குறித்து மருத்துவரிடம் கேட்பதற்காக மேற்கொள்ளும் உரையாடல்.

(15 புள்ளிகள்)

රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව

**அரசகரும மொழிகள் திணைக்களம்**

**III** වන මට්ටම **- දෙමළ**

**மட்டம் III – தமிழ்**

පිළිතුරු

**விடைகள்**

---

**01. பின்வரும் சொற்களைச் சரியாக எழுதுக.**

1. சிள்லரைத் காசு - சில்லறைக் காசு
2. பிண்னேறம் - பின்னேரம்
3. விளுன்துட்டுது - விழுந்துட்டுது

02. பின்வரும் சொற்களுள் சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. முழுப்பேர்
2. பின்னேரம்
3. ஆஸ்பத்திரி

03. குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்குப்படுத்தி சரியான சொல்லை எழுதுக.

1. கிவங் முவிறைடு - வங்கி விடுமுறை
2. லும்கஅலவ - அலுவலகம்
3. ர்ணைளயாஆ - ஆணையாளர்

04. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

1. பொருளாதார அபிவிருத்தி
2. விளையாட்டு விழா
3. அவசர சிகிச்சை

05. பின்வரும் சொற்களுக்கான பன்மைச் சொற்களை எழுதுக.

1. பல் - பற்கள்
2. தங்கை – தங்கைமார்
3. வட்டம் - வட்டங்கள்

06. பின்வரும் சொற்களுக்கான ஒருமைச் சொற்களை எழுதுக.

1. சங்கங்கள் - சங்கம்
2. நாடுகள் - நாடு
3. நாட்கள் - நாள்

07. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

1. தாதியர்கள் நோயாளிகளுக்கு உதவி செய்தார்கள்
2. தம்பி பாடசாலைக்கு செல்வார்
3. நாங்கள் பரீட்சைக்குத் தயாராகிறோம்

08. எழுத்தில் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கைகளை இலக்கங்களில் எழுதுக.

1. நூற்று முப்பத்து நான்கு - 134
2. ஐநூற்று எழுபத்து மூன்று - 573
3. அறுநூற்று நாற்பத்து ஒன்று - 641

09. எண்களில் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கைகளை எழுத்தில் எழுதுக.

1. 356 – முந்நூற்று ஐம்பத்து ஆறு
2. 1285 – ஆயிரத்து இருநூற்று எண்பத்தி ஐந்து
3. 910 – தொள்ளாயிரத்து பத்து

10. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான சிங்களச் சொற்களை எழுதுக.

1. கடிகாரம் - ඔරලෝසුව
2. தபால் நிலையம் - තැපැල් කාර්යාලය
3. கட்டிடம் - ගොඩනැගිල්ල

11. பின்வரும் சிங்களச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை எழுதுக.

1. නිලධාරියා - உத்தியோகத்தர்
2. ඉතිහාසය - வரலாறு
3. පන්තිය - வகுப்பு

12. தரப்பட்டுள்ள பந்தியை அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைக் கொண்டு பூரணப்படுத்தல் வேண்டும்.

(நன்னடத்தைக், ஏற்றுக், தற்றுணிவின், கொள்கை, சுற்றறிக்கை, நிரூபிக்க, அரசகரும மொழியாக, நியமனத்திற்கான, சிங்கள, ஐந்து)

இந் நியமனம் (1) ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் ஐந்து (05) வருடங்கள் கடந்து செல்ல முன், அரச (2) கொள்கை களுக்கு அமைவாக இரண்டாம் அரசகரும மொழித் தேர்ச்சியை அடைந்துள்ளதாக தாங்கள் (3) நிரூபிக்க வேண்டும். தாங்கள் இந் நியமனத்திற்கான தகைமைகளை (4) சிங்கள மொழியில் பூர்த்தி செய்திருப்பின், தங்களது இரண்டாம் அரசகரும மொழியாக அமைவது தமிழ் மொழியாகும். அதே போன்று தாங்கள் இந் நியமனத்திற்கான தகைமைகளை தமிழ் மொழியில் பூர்த்தி செய்திருப்பின், தங்களது இரண்டாம் (5) அரசகரும மொழியாக அமைவது சிங்கள மொழியாகும். மேலும் தாங்கள் இந் (6) நியமனத்திற்கான தகைமைகளை ஆங்கில மொழியில் பூர்த்தி செய்திருப்பின், தங்களின் (7) தற்றுணிவின் படி அரசகரும மொழியாக சிங்களம் அல்லது தமிழ் ஆகிய இரு மொழிகளில் ஒரு மொழியில் தேர்ச்சியை (8) நன்னடத்தைக் காலத்தினுள் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதன் பின்னர் நியமனம் ஏற்றுக் கொள்ளப்பட்ட தினத்தில் இருந்து (9) ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவாறு அடுத்த அரசகரும மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். 2014.01.21ஆந் திகதிய அரசாங்க நிர்வாக (10) சுற்றறிக்கை 01/2014 ஏற்பாடுகள் இதற்கு ஏற்புடையனவாகும்.

## பகுதி II

### 'அ' உப பகுதி

13. பின்வரும் பந்தியை வாசித்து அதிலுள்ள விடயங்களைக் கொண்டு தரப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்க.

கலைமகள் வித்தியாலயம் - கண்டி

இணைப்பாட விதானச் செயற்பாடுகளை மேம்படுத்தும் கருத்திட்டம்

மாணவர் விபரப் படிவம்

தரம் [ 9 ] வகுப்பு [ ஏ ]

1. மாணவரின் பெயர் :- கார்த்திக்
2. பிறந்த திகதி :- 2002.03.15
3. விருப்பமான பாடம் :- விஞ்ஞானம்
4. கடந்த தவணையில் ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்ற பாடம் :- சுகாதாரம்
5. தந்தையின் பெயர் :- தேவராஜ்
6. தாயின் பெயர் :- வசந்தி
7. 1. தந்தை அல்லது தாய் அல்லாத வேறு ஒரு பாதுகாவலர் இருப்பின் அவரது பெயர் :- ----
   2. உறவு முறை :- அக்கா, அண்ணா
8. பாடசாலைக்கு சமுகமளிக்கும் முறை :- பஸ் [ ]

   (உரிய கூட்டில் ✓ அடையாளமிடுக) பாடசாலை வேன் [ ]

   சைக்கிள் [ ]

   நடந்து [ ]

   வேறு [ √ ]

9. தந்தையின் தொழில் :- அதிபர்

   தாயின் தொழில் :- ஆசிரியர்

   பாதுகாவலரின் தொழில் :- ------

10. சகோதர, சகோதரிகள் குறித்த விபரம் :-

சகோதரர்களின் எண்ணிக்கை [ 1 ] சகோதரிகளின் எண்ணிக்கை [ 1 ]

11. பாடசாலைக்குச் செல்லும் சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை :- 2
12. குடும்பத்தில் உயர்கல்வி பெற்றுள்ளோர் யாவர்? தந்தை மற்றும் தாய்
13. அவ்வாறு பெற்ற கல்வி மட்டம் யாது? பட்டதாரிகள்

| | |
|---|---|
| தரம் 10 வரை | |
| க.பொ.த. சா/த சித்தி | |
| க.பொ.த. உ/த சித்தி | |
| பட்டதாரி | √ |
| அதற்கு மேல் | |